

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், பெரம்பூர் தெற்கு பகுதி 45வது வட்ட கழக செயலாளர் ஜி. மாரிமுத்து – சங்கீதா ஆகியோரின் மகன் விக்னேஷ் (எ) ஸ்டாலின் – தர்ஷினி ஸ்ரீமதி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர், பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க. ஜெயராமன், மாவட்டத் துணை செயலாளர் கமலக்கண்ணன், கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், 9வது வார்டு கிளை செயலாளர், எம். ஜி. சாமிநாதன் மகன் சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முனைவர் எஸ். நவீன்குமார் – மோனிஷா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் கே. கணபதி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் திருமதி ரேகா பிரியதர்ஷினி, முனைவர் சு. ஆனந்தராஜா, கழக நிருவாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### மோடி தலைமையிலான ஆட்சியில்

# விலைவாசி உயர்வால், நாட்டு மக்கள் தத்தளிப்பு!

## எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி விமர்சனம் !



புதுடெல்லி, ஜூன் 7-

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், கடந்த ஆண்டில் இருசக்கர வாகன விற்பனை 17 சதவீதமாகவும், கார் விற்பனை 8 புள்ளி 6சதவீதமாகவும்குறைந்துள்ளது.

இதேபோன்று, கைப்பேசிகளின் சந்தை 7 சதவீதம் குறைந்துள்ளதாக கூறியுள்ளார். மறுபுறம் செலவுகள் மற்றும் கடன்கள்இரண்டும்தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. வீட்டு வாடகை, உள்நாட்டு பணவீக்கம், கல்விச்செலவுகள், எல்லாமே விலை உயர்ந்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இவை அனைத்தும் வெறும் எண்கள் அல்ல. இவை ஒவ்வொரு சாதாரண இந்தியனும் தத்தளிக்கும் பொருளாதார அழுத்தத்தின் யதார்த்தங்கள் என்று ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு இந்தியருக்கும் வேலை செய்யும் பொருளாதாரம்தான், நமக்கு தேவை என்றும் ஒரு சில முதலாளிகளுக்கு வேலை செய்யும் பொருளாதாரம் தேவையில்லை என்றும் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூகவலை தளப்பதி வில் கூறியுள்ளார்.

# பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைத்திடுவீர்!

## ஒன்றிய அரசுக்கு - தமிழ்நாடு அரசு கோரிக்கை!

சென்னை, ஜூன் 7–

பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைக்குமாறு ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையே பெண்ணையாறு நதிநீரை பங்கீடுவதில் உடன்பாடு ஏற்படாமல் இருந்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக, ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீலை, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் டெல்லியில் அண்மையில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். கர்நாடக ஆற்றின் மீதும் அதன் துணை நதியான மார்க்கண்டேய நதி மீதும் உள்ள திட்டங்கள், 1892 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் மெட்ராஸ் மைசூர் ஒப்பந்தங்களை மீறுவதாக அமைந்துள்ளதாக, இதன் காரணமாக தமிழ்நாட்டின் நலன்கள் பாதிக்கப்படுவதாக, தமிழ்நாடு அரசு தொடர்ந்து வாதிட்டு வருகிறது. உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இரு மாநிலங்களின் தரப்பில் சார்பில் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், இந்த விவகாரத்தில் தீர்வு ஏற்படவில்லை என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

எனவே, உச்சநீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைப்படி, இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு தீர்ப்பாயம் அமைப்பதே என்று ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளையொட்டி- கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுரேந்தர்

# சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் இருவருக்கு இலவச கண் சிகிச்சை!

சென்னை, ஜூன் 7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 -வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று சங்கர நேத்ராலயா மருத்துவர் சுரேந்தர் ஏழை எளியோர் இருவருக்கு இலவச கண் சிகிச்சைசெய்துள்ளார்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் ஏழை எளியோர் இருவருக்கு சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் கண் மருத்துவர் சுரேந்தர் இலவச கண் சிகிச்சை செய்து வருகிறார்.

அதேபோன்று இந்த ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த தினத்தை முன்னிட்டு 3.6.2025 அன்று நுங்கம்பாக்கம் சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் பிரபல கண் மருத்துவர் சுரேந்தர் இரண்டு எழை எளியோருக்கு இலவசமாக கண் சிகிச்சை செய்துள்ளார்.

கண் சிகிச்சை மேற்கொண்ட இருவரும் மருத்துவர் சுரேந்தருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 18 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மேல் நிலை குடிநீர் தொட்டியை மீன் வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர் ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார் உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ் உமரிசங்கர், ஒன்றிய செயலாளர் டி. பி.பாலசிங், பரமன்குறிச்சி இலங்கோ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரசு உறைவிடப் பள்ளி மாணவி

# ராஜேஷ்வரியின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்!

## மாணவியின் சாதனையைப் பாராட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 7–

அரசு உறைவிடப் பள்ளியில் படித்து ஐ.ஐ.டி. சேருவதற்கான சாதனை படைத்த மாணவியின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**தந்தையை இழந்தாலும், அவர் கனவைத் தன் நெஞ்சில் சுமந்து நனவாக்கியிருக்கும் அரசு உறைவிடப் பள்ளி மாணவி ராஜேஷ்வரியின் சாதனைக்கு என் Salute!**

**அவரது உயர்கல்விச் செலவு மொத்தத்தையும் அரசே ஏற்கும் என மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.**

**ராஜேஷ்வரி போன்ற நமது மகள்கள் மேலும் பலர் சேருவதுதான் IITக்கு உண்மையான பெருமையாக அமையும்! அதற்காக நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து உழைக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஜூன். 11-12 தேதிகளில்

# சேலத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - இரா.இராஜேந்திரன் ஆய்வு!

*சேலம், ஜூன் 7-*

*முதலமைச்சர் சேலம் வருகையையொட்டி, விழா நடைபெறும் சேலம் மாவட்டம், இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (05.06.2025) ஆய்வு மேற்கொண்டார்கள்.*

*முதலமைச்சர் வருகின்ற 11.06.2025, 12.06.2025 ஆகிய 2 நாள்கள் சேலம் மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்கள். குறிப்பாக, 11.06.2025, புதன்கிழமை அன்று வருகை புரிந்து மேட்டூர் செல்ல உள்ளார்கள். இதனைத்தொடர்ந்து, 12.06.2025 வியாழக்கிழமை அன்று காலை மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்கள்.*

*பின்னர், சேலம், இரும்பாலை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுச் சுமார் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். இவ்விழாவில், சுமார் ரூ.1,500 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிடவுள்ளார்கள்.*

*பொதுப்பணித்துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் விழா நடைபெறும் இடமான அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து, தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நேற்றைய தினம் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.*

*இந்த ஆய்வின்போது, விழா மேடை அமைத்தல், பயனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கான இருக்கை வசதிகள், பந்தல் அமைக்கும் பணிகள், பாதுகாப்புப் பணிகள், பயனாளிகளுக்கான அணுகு சாலை, குடிநீர், கழிப்பிடம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகையையொட்டி மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அமைச்சர் பெருமக்கள் அறிவுறுத்தினார்கள்.*

*இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபிநபு, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மா. இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.தேவிமீனாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தியாகராஜன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் சுரேஷ்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.*



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி முத்தையாபுரம் பகுதியை சேர்ந்த கோவில் பிள்ளைநகர், ஒத்த வீடு, காதர் மீரான் நகர், முத்து நகர் ஆகிய பகுதிகளில் நலத்திட்ட உதவிகளை சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் வழங்கினார். உடன் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன்,மாமன்ற உறுப்பினர் மண்டலத் தலைவர் பாலகுருசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.